செ.வெ.எண்: 977

# பத்திரிக்கை செய்தி

சமூக நலத் துறை மூலம் 'தத்துத் திட்ட விழிப்புணர்வு பயிற்சி முகாம்' 11/11/2008 அன்று சென்னை – 4, ராதாகிருஷ்ணன் சாலையிலுள்ள ஹோட்டல் சவேராவில் நடைபெற்றது.

இந்த பயிற்சி முகாமில் அனைத்து மாவட்டங்களை சார்ந்த மாவட்ட சமூக நல அலுவலர்கள், குழந்தைகள் நலக் குழுமத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர், சமூக பாதுகாப்புத் துறையின் நன்னடத்தை அலுவலர்கள், காவல் துறை அதிகாரிகள், தத்து திட்டம் செயல்படுத்த உதவிடும் இதர துறையை சார்ந்த அதிகாரிகள், தத்து திட்டம் செயல்படுத்தும் தொண்டு நிறுவனங்கள், தத்தெடுத்த (ம) தத்தெடுக்க காத்திருக்கும் பெற்றோர் ஆகியோர் பங்கு பெற்றனர்.

பெருகிவரும் இயந்திரமயமாகுதல் (ம) தொழிலாளர் இடம் பெயர்தல் ஆகியவை நிமித்தமாக சமீப காலங்களில் குழந்தைகள் பெருமளவில் அநாதைகளாக்கப்படுகின்றனர். அது போன்ற குழந்தைகளுக்கு மறுவாழ்வளிக்கும் வண்ணம் தத்து திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தத்து திட்டம் மூலம் இத்தகைய குழந்தைகளுக்கு நல்ல குடும்பங்களும் பெற்றோரும் கிடைக்கப்பெற்று, அன்பும் அரவணைப்பும் பெற்று நல்ல குடிமக்களாக தங்களுடைய முழுமையான வளர்ச்சியை அடைகின்றனர். தத்து திட்டம் ஒரு குழந்தைக்கு நல்ல வாழ்க்கையை வழங்கும் படிகட்டாக திகழும் அதே நேரத்தில், குழந்தையில்லா தம்பதியருக்கு ஏக்கத்தை தவிர்த்து பெரும் நம்பிக்கையூட்டும் நல்லதொரு திட்டமாகவும் விளங்குகிறது.

திரு. டி. விவேகானந்தன், இ.ஆ.ப., சமூக நல இயக்குநர் (பொறுப்பு) மற்றும் அரசு இணை செயலர், சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டத் துறை வரவேற்புரை வழங்கி தத்து திட்டம் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில் இது போன்ற முகாமின் முக்கியத்துவத்தை குறித்து விளக்கி கூறினார். திரு. நா. ச. பழனியப்பன், இ.ஆ.ப., முதன்மை அரசு செயலர் தத்து திட்டத்தின் முக்கியத்துவத்தை குறித்து விளக்கி கூறினார்.

திருமதி. கீதா ஜீவன், தமிழக அரசின் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் ஆதரவற்ற, கைவிடப்பட்ட (ம) ஒப்படைக்கப்படும் குழந்தைகளை அரசு மிகுந்த அக்கறையுடனும் கவனத்துடனும் தத்து திட்டம் மூலம் சிறந்த முறையில் மறுவாழ்வு வழங்கி வருகிறதென்றும், இத்தகைய முகாம்கள் மூலம் பொது மக்களிடம் விழிப்புணர்வு அதிகரித்து, குழந்தையில்லா தம்பதியர் தத்தெடுக்க முன்வருவர் என்று தான் நம்புவதாகவும், இத்திட்டத்தை செயல்படுத்தும் தொண்டு நிறுவனங்களும் நெறிமுறைகளை பின்பற்றி குறையின்றி திட்டம் செயல்படுத்திட உதவிடுமாறும் கேட்டுக் கொண்டார்.

திரு. ஜே. பாட்டி, துணை இயக்குநர் (காரா), மத்திய தத்து வள நிறுவனம், புதுடில்லி தத்து திட்டம் குறித்த சிறப்பு சொற்பொழிவாற்றினார்.

சமூக நல பணியிலுள்ள சில முன்னணி நபர்கள் மூலம் தத்து திட்டம் தொடர்புடைய கீழ்காணும் தலைப்புகளில் விளக்கவுரை இந்த முகாமில் வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| 1. தத்துத் திட்டம் மற்றும் அதன் தொடர்புடைய சட்டங்கள் | – திருமதி. சந்திரா தணிகாசலம்,<br>கௌரவ பொது செயலர்,<br>இந்திய குழந்தைகள் நல சங்கம்<br>– தமிழ்நாடு, சென்னை. |
| 2. தத்துத் திட்டத்தில் குழந்தைகள் நல குழுமத்தின் பங்கு | – டாக்டர். மனோரமா,<br>தலைவர்,<br>குழந்தைகள் நலக் குழுமம், சென்னை. |
| 3. தத்துத் திட்டம் குறித்தான கண்காணிப்பு மற்றும் அறிக்கைகள். | – திருமதி. ஹீரா இராஜரத்தினம்,<br>சட்ட ஆலோசகர்,<br>இந்திய சமூக நலச் சங்கம், சென்னை. |
| 3. தத்துத் திட்டம் – துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு | – திருமதி. அனந்தலட்சுமி,<br>உறுப்பினர், தத்தெடுத்தலுக்கான ஒருங்கிணைப்பு நிறுவனம், சென்னை. |
| 5. தத்து திட்டத்தில் ஒழுக்கவியல் | – திருமதி. ஆண்டாள் தாமோதரன்,<br>துணை தலைவர்,<br>இந்திய குழந்தைகள் நல சங்கம்<br>– தமிழ்நாடு, சென்னை. |

குழந்தைகளை தத்தெடுத்த பெற்றோர் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். கலை நிகழ்ச்சிகளுக்கு பின்னர், திருமதி. ஜே. எம். யமுனா ராணி, துணை இயக்குநர் (குழந்தை நலம்), சமூக நலத் துறை அவர்கள் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9